# கிறிஸ்துப்பிறப்பு நள்ளிரவுத் திருப்பலி

# மூன்றாவது திருவழிபாடு ஆண்டு

# 2024-12-24

(*இன்றைய வாசகங்கள்:*

*எசாயா ஆகமத்திலிருந்து வாசகம்* 9:1-6,

*திருப்பாடல்* 6(95):1-2a.2b-3.11-12.13.,

*திருத்தூதர் பவுல் தீத்துக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்* 2:11-14. ,

*புனித லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 2:1-14)

## திருப்பலி முன்னுரை

*அன்பிற்கினியவர்களே! கிறிஸ்து பிறப்பின் பெருவிழா நல்வாழ்த்துக்களை கூறி அனைவரையும் கிறிஸ்துப்பிறப்பின் ஆடம்பர திருப்பலி கொண்டாட்டத்திற்கு அன்புடன் அழைக்கின்றோம். .*

*கிறிஸ்மஸ் இரவு மகிமையின் இரவு ,அந்த மகிமையை வானதூதர்கள் பெத்லகேமில் பறைசாற்றினர் .*

*கிறிஸ்மஸ் இரவு, மகிழ்ச்சியின் இரவு ,அந்த மகிழ்ச்சியை வானதூதர்கள் இடையர்களுக்கு அறிவித்தனர் ..*

*கிறிஸ்மஸ் இரவு, விடுதலையின் இரவு, அந்த விடுதலை தான் விண்ணகம் விட்டு மண்ணகம் வந்த கிறிஸ்து ..*

*இன்று விடியலின் திருநாள், வீடுவீடாய் கதவை தட்டியும் கிடைக்காத இடம் இறுதியில் கிடைத்தது மாடடைக் குடிலில். இந்த மாடடைக் குடிலும் குழந்தையேசுவின் தொட்டிலானது , விடியலும் நம் வசமானது. விண்ணிலிருந்து வந்த அந்த விடியலை கொண்டாடவே நடுச்சாமம் கண்விழித்து விடியும் வரை வண்ண விளக்குடன் மகிழ்வுடன் இருக்கின்றோம். அன்று கிறிஸ்து பிறப்பார் என்று மக்கள் ஏங்கி இருந்தனர், இன்று நாம் கிறிஸ்து பிறந்துவிட்டார் என்று மகிழ்ந்து இருக்கின்றோம். கிறிஸ்து பிறப்பை ஆண்டாண்டு காலமாய் கொண்டாடி மகிழும் நாம் எப்போது கிறிஸ்துவாக பிறக்கப்போகின்றோம்? விடுதியில் இடம் இல்லை என்று புறக்கணிக்கப்படும் இயேசு மரி சூசை போன்ற குடும்பங்களை*

*எப்போது அடையாளம் கண்டுகொள்ளப்போகிறோம்? கிறிஸ்மஸ் விழாவினை கொண்டாடுவதால் நம் வீட்டில் கிறிஸ்து பிறந்துவிட்டார் என்று அற்பமாக எண்ணாமல், கிறிஸ்துவின் விழுமியங்களான மகிழ்ச்சி, எளிமை, ஏழ்மை ,அமைதி, பகிர்வு போன்றவற்றை நம் அடையாளமாக்குவோம், கிறிஸ்துவாக பிறப்போம். பாலன் இயேசுவின் பிறப்பின் ஆசீர்வாதம் நம் பங்கில் முழுமையாக ததும்பட்டும், நம் வீடுகளில் அமைதி நிரம்பட்டும், நம் உள்ளங்களில் அவர் அருள் ஊற்றாய் பொங்கிவழியட்டும். இத்தகைய ஆசீரை குடும்பமாய் பெற்று வளமாய் வாழ தொடர்ந்து ஜெபிப்போம் இத்திருப்பலியில்...............*

## ***விசுவாசிகள் மன்றாட்டுகள்:***

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில்: ஆண்டவரே! கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சியால் எம்மை நிரப்பியருளும்!*

*மீட்பின் ஒளியாம் இறைவா!*

*அமைதியின் அரசராக எம் மண்ணில் பிறந்த கிறிஸ்துவின் அமைதியை இவ்வுலகில் எத்திக்கும் பரப்ப சிறந்த பணியாளர்களாக மாற்ற எம் திருத்தந்தை ஆயர்கள் குருக்கள் துறவியர் அனைவரையும் இறை அமைதியால் நிரப்பி நிறை மகிழ்ச்சியை தந்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம் .*

*மீட்பின் ஒளியாம் இறைவா!*

*இம்மானுவேலனாக எம் மத்தியில் பிறந்த பாலகன் இயேசுவின் உடனிருப்பு இன்று கிறிஸ்மஸ் விழாவினை குதூகலமாக கொண்டாடும் எங்கள் அனைவரின் வாழ்விலும் உடனிருக்கவும் இன்ப துன்ப நேரங்கள், வேதனை சோதனை வேளைகள் , பணிச்சுமை , கடன் சுமை, பொருளாதார சுமை போன்ற இக்கட்டுககளில் நாங்கள் இம்மானுவேலனின் துணையினால் வழிநடத்தப்பட இறைவா மன்றாடுகின்றோம்.*

*மீட்பின் ஒளியாம் இறைவா!*

*அஞ்சாதீர்கள் ! உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார் என்று இடையூர்களுக்கு அறிவிக்கப்பட்ட மகிழ்வின் நற்செய்தி துன்பங்களோடு போராடும் அனைவருக்கும், குறிப்பாக கிறிஸ்தவ விசுவாசத்திற்காக சித்திரவதைக்கு உள்ளாகின்ற விசுவாசிகளுக்கு இன்றைய கிறிஸ்மஸ் மகிழ்வின் விழாவாக அமைய இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*மீட்பின் ஒளியாம் இறைவா!*

*ஏழை எளிமை வாழ்வை தேர்ந்துகொண்ட கிறிஸ்துவின் ஆட்சி எம் நாட்டிலும் எம் பங்கிலும் எம் குடும்பங்கலும் நிலவவும் கிறிஸ்மஸ் பெருவிழாவின் மையமாக விளங்குகின்ற பகிர்தல் , புரிதல் , மகிழ்தல் போன்ற கிறிஸ்துவின் மதிப்பீடுகள் இன்றைய திருப்பிலியில் பங்கெடுக்கும் எங்கள் ஒவ்வொருவரின் வாழ்விலும் பிரகாசிக்க வரம் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*